# TNPSC, SSC, IBPS மற்றும் RRB தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள்



தமிழக அரசு **TNPSC, SSC, IBPS, RRB** போன்ற போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சிகளை சென்னையில் உள்ள சர் தியாகராயா கல்லூரி (**500** இடங்கள்) மற்றும் மாநிலக் கல்லூரி, சேப்பாக்கம் (**300** இடங்கள்) வளாகங்களில் வழங்குகிறது.

10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 வயது நிரம்பியவர்கள் **www.cecc.in** இணையதளத்தில் **10.09.2024 முதல் 24.09.2024 வரை** விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிகள் வாராந்திர வேலை நாட்களில் பிற்பகல் **2.00 மணி முதல் 5.00 மணி வரை** ஆறு மாதங்கள் நடைபெறும்.

கூடுதல் தகவல்களுக்கு **044-25954905** மற்றும் **044-28510537** எண்களை தொடர்பு கொள்ளலாம். அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும்.

DIPR
வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை
tndiprnews | tndipr | tndipr | TN DIPR | www.dipr.tn.gov.in | TNDIPR, Govt. of Tamil Nadu

GOVERNMENT OF TAMIL NADU

# COMPETITIVE EXAMINATIONS COACHING CENTRE, CHENNAI

## Coaching to educated youth for various Competitive Examinations (TNPSC, SSC, IBPS & RRB)

Applications are invited through Online Mode from candidates belonging to Tamil Nadu who have passed at least **10th Standard** for getting free coaching for TNPSC, SSC, IBPS, RRB Examinations. Coaching will be provided from **2.00 p.m.** to **5.00 p.m.** on week days for a duration of 6 months at **Sir Theagaraya College Campus, Old Washermenpet, Chennai-21** and **Presidency College Campus, Chepauk, Chennai-05** for **500** aspirants and **300** aspirants, respectively.

Admission for the above coaching classes will be followed on the basis of Tamil Nadu Govt. reservation policy and total marks secured in SSLC examinations.

| | | |
|---|---|---|
| a. | Commencement Date of Online Application | **10-09-2024 (Tuesday)** |
| b. | Last date for Submission of Online Application | **24-09-2024 (Tuesday)** |

For further details refer to the notification in our website: **www.cecc.in**

**Additional Chief Secretary / Director General of Training**

**DIPR/ 923 /DISPLAY/2024**

தமிழ்நாடு அரசு

# போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம், சென்னை

## படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும் வகையில் TNPSC மற்றும் SSC, IBPS, RRB போட்டித் தேர்வுக்கான பயிற்சி வழங்குதல்

**TNPSC** மற்றும் **SSC, IBPS, RRB** ஆகிய போட்டித்தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்வலர்களுக்கு தமிழக அரசின் சார்பில் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களால் கட்டணமில்லாப் பயிற்சி, சென்னை, **பழைய வண்ணாரப்பேட்டை சர் தியாகராயா கல்லூரி** வளாகத்தில் **500** ஆர்வலர்களுக்கும், **சென்னை, சேப்பாக்கம், மாநிலக்கல்லூரி** வளாகத்தில் **300** ஆர்வலர்களுக்கும் **பிற்பகல் 2.00 மணி** முதல் **5.00 மணி** வரை வாராந்திர வேலை நாட்களில் ஆறு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேற்படி பயிற்சிக்கு குறைந்த பட்சம் **10-ஆம்** வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து இணையதளவழியில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், தமிழக அரசால் பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் பயிற்சிக்கான சேர்க்கை நடைபெறும்.

| | | |
|---|---|---|
| அ. | இணையதளவழி விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள் | **10.09.2024 (செவ்வாய்க்கிழமை)** |
| ஆ. | இணையதளவழி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | **24.09.2024 (செவ்வாய்க்கிழமை)** |

கூடுதல் விவரங்களை **www.cecc.in** என்ற இணையதளத்தில் மூலம் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கை மூலம் அறிந்துகொள்ளலாம்.

**கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறை தலைவர்.**

**செ.ம.தொ.இ./ 923 /வரைகலை/2024**

செய்தி வெளியீடு எண் : 1389 நாள் : 08.09.2024

செய்தி வெளியீடு

# படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும் வகையில்TNPSC மற்றும் SSC, IBPS, RRB போட்டித் தேர்வுக்கான பயிற்சி வழங்குதல்

TNPSC, SSC, IBPS, RRB ஆகிய முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்வலர்களுக்கு தமிழக அரசின் சார்பில் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களால் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரி வளாகத்தில் 500 ஆர்வலர்களுக்கும் மற்றும் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநிலக் கல்லூரி வளாகத்தில் 300 ஆர்வலர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஆர்வலர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு இணையவழியாக விண்ணப்பங்கள் பெற்று, புதிதாக சேர்க்கை நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகள் பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை ஆறு மாத காலம் வாராந்திர வேலை நாட்களில் நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகளில் சேர விரும்பும் ஆர்வலர்கள் குறைந்த பட்சம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதோடு 01-01-2024 அன்று 18 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேற்படி போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் உணவு மற்றும் தங்கும் வசதிகள் இல்லை .

பயிற்சியில் சேர விரும்பும் ஆர்வலர்கள் போட்டித் தேர்வுகள் பயிற்சி மைய இணையதளம் www.cecc.in வாயிலாக 10.09-2024 முதல் 24.09.2024 வரை விண்ணப்பிக்கலாம். பயிற்சி வகுப்புகளில் சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களை மேற்குறிப்பிட்ட இணையதள முகவரியில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 044 - 25954905 மற்றும் 044 - 28510537 ஆகிய தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தமிழக அரசால் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள இனவாரியான இடங்களுக்கு ஏற்ப ஆர்வலர்கள் தெரிவு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் வெளியிடப்படும். அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடுதல் தலைமைச் செயலாளர் /
பயிற்சித் துறைத் தலைவர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu